**O.S.No.52/2018**

வா.சா.2, திரு. ரவி
நாள் : 29.01.2026 நேரம் :3.00 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)எனது மனைவி தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எனது மனைவி ஏற்கனவே நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் நிரூபண வாக்குமூலத்தில் படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலமும் எனது மனைவி வாதி தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலமும் ஒரே வாக்குமூலம் என்றால் எனக்கு படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எனது மனைவிக்காக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். நான் எனது மனைவிக்கு ஆதரவாக எனது மனைவி தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளதால் எனது சாட்சியம் நீதிமன்றத்தால் ஏற்று கொள்ளப்படவேண்டியதில்லை என்றால் சரியல்ல.

2)தாவா வழக்கு சொத்து எத்தனை லட்சம் போகும் என்றால் தெரியாது. எத்தனை லக்கத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 3 லக்க சொத்துக்கு தாக்கல் செய்துள்ளேன். ஒவ்வொரு லக்க சொத்திலும் கட்டுமானத்துடன் கடைகள் உள்ளது என்றால் சரிதான். மேலும், கீழும் கடைகள் உள்ளன. ஒவ்வொரு லக்கத்திலும் உள்ள கடைகளும் சுமார் 2 லட்சம் குறையாமல் கட்ட முடியாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது 2 லட்சத்திற்கு மேலாயிருக்கலாம். தாவா சொத்தில் உள்ள 6 கடைகளுக்கு சுமார் 8 லட்சமாயிருக்கும் என்றால் சரியல்ல, தாவா சொத்தில் 2 கடைகளும், அதற்கு மேல் 2 அறைகள் மட்டுமே உள்ளன. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியபடி இந்த நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு விசாரிக்க அதிகார வரம்பு

இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சந்தை ஒட்டி உள்ள ஓட்டு வீட்டை 2ம் பிரதிவாதியின் தகப்பனார் அவருடைய மகளான வாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

3)மேற்படி 2ம் பிரதிவாதியின் தகப்பனார் அவர் கிரையம் பெற்ற பத்திரத்தை பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டு தான் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.5 வது ஆவணத்தில் 2ம் பிரதிவாதிக்கு அவரது தகப்பனார் 1998ல் வாங்கிய கிரையத்தை குறிப்பிட்டு தான் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதனால் மேற்படி பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தை 2ம் பிரதிவாதி தாவா சொத்துகளை தனது மனைவியான 5ம் பிரதிவாதிக்கு இனாம் செட்டில் மென்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்திரத்தை பற்றி எனது மனைவிக்கு தெரியும் என்றால் எனது மனைவிக்கு வழக்கு தாக்கல் செய்த பின்னர் தெரியும்.

4)மேற்படி வா.சா.ஆ.6 ஆவணத்தை பற்றி எனது மனைவி என்னிடம் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி பத்திரம் 2017ம் ஆண்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கது என்றால் சரியல்ல. இன்று வரை 5ம் பிரதிவாதி பெயரில் தான் தாவா சொத்திற்கான பட்டா, நிலவரி ரசீது, மின் கட்டண ரசீது , பேரூராட்சி வரைபட அனுமதி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் தெரிந்தும் தெரியாது எனது மனைவிக்காக இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை நானோ, எனது மனைவியோ கூட்டாக அனுபவம் செய்வதில்லை என்றால் சரிதான். எனது மாமனார் அவர் கிரையம் பெற்ற சில சொத்துகளை எனது மனைவி மற்றும் பிற பெண் பிள்ளைகளுக்கு கிரையம் கொடுத்து பணத்தை கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி விவரங்கள் தெரிந்தும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5)எனது மனைவிக்கு தாவா சொத்தை பொறுத்து எந்த பங்கு பாத்தியமும் சட்டப்படி கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பிறரின் தூண்டுதலின் பேரில் பணத்திற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் 9 வது பத்தியில் உள்ள சங்கதிகள் வழக்கிற்காக பொய்யாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சரியான நீதிமன்ற கட்டணம் கட்டாததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் வியாஜ்ஜியமூலம் இல்லை என்றால் சரியல்ல. சட்ட காலத்திற்குள் இவ்வழக்கை தாக்கல் செய்யாததால் வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

6)வழக்கின் 3 ம் பிரதிவாதி சண்முகத்திற்கு எனது மாமனார் எழுதி கொடுத்த இனாம் செட்டில் மென்ட் ரத்து செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் பத்திரம் தான் மேற்படி இனாம் செட்டில் மென்ட் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தை ரத்து செய்துவிட்டு 2 ம் பிரதிவாதி பெயரில் எனது மாமனார் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி எழுதி கொடுத்த விவரம் தெரிந்தும், தெரியாது என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிராதில் கூறிய பரிகாரம் வாதிக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 03.30 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.01.29 15:45:23 +0530